1981 பிப்ரவரி 26]

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: சென்ற முறை மணல் கலந்து மண் கொரம்பு அமைக்கப்பட்டு அது சரியில்லாததால், அந்த முறையை மாற்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இப்போது அந்தப் பகுதியிலே சிமெண்ட் வைத்துக் கட்ட வேண்டும் என்றும், இப்போது வலுவான நிலையிலே உருவாக்கப்பட வேண்டும் என்றும் மண் கொரம்பு அமைக்கப்பட்டு வருகிறது.

ரப்பர் தொழிற்சாலை.

*86 வினா—திரு. பா. ரா. தாமஸ் (திரு. த. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலை தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பா. ரா. தாமஸ்: வருங்காலங்களிலே செயற்கை ரப்பரைவிட இயற்கை ரப்பரைத்தான் உலகமே நம்பியிருக்க வேண்டுமென்ற கருத்து நிலவி வருகிறது. அதன் அடிப்படையில், கன்னியாகுமரியில் ரப்பர் உற்பத்தி இருப்பதால், அங்கே ஒரு தொழிற்சாலையை உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: இப்போது அதுபோன்ற எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ம. சங்கரலிங்கம்: கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலை தொடங்குகின்ற குறிப்பு அரசினிடத்தில் இல்லை என்று பதில் தந்தார்கள். கூட்டுறவுத் துறையில் சிறு உற்பத்தியாளர்கள் ரப்பர் தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்று அரசுக்கு மனு செய்திருக்கிறார்கள். அதற்குப் பதில் அளிக்கும்போது, அரசே ரப்பர் தொழிற்சாலையை இண்டஸ்ட்ரீஸ் டிப்பார்ட்மெண்டின் கீழ் தொடங்க இருப்பதனால், அதற்கு அனுமதி தரப் படாது என்று வந்திருக்கிறது. அரசே தொடங்க இருப்பதால், சிறு உற்பத்தியாளர்கள் தொடங்குவதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. இந்த நிலை தவிர்க்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: ஏற்கெனவே திருப்பத்தூரில் தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், டிட்கோ-வும் திரு. தியாகராஜன் என்பவரும் சேர்ந்து ஆரம்பிப்பதாக இருந்தது. அதற்கான நிதி ஒதுக்கீடு எல்லாம் செய்யப்பட்டது. அதற்குப் பின்னாலே கூட்டுறவுத் துறையில் தொடங்க இருந்ததால், இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது. அதற்குப் பின்னால் தனியாக ஆரம்பிப்பதற்கு மனுக்கள் வந்ததாகவும் அரசே ஆரம்பிக்க இருப்பதாலே நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்பதாகவும் சொன்னார்கள். அதுபோன்ற தகவல் எதுவும் இல்லை. அப்படி யாராவது தனியார்கள் தொடங்கினால், இந்த அரசு தேவையான உதவிகளைச் செய்யும்.

ஆதி திராவிடர்கள் முறையீடு.

@ *48 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் இருப்புப்பாதை தலைமை நிலையம் ஏற்படும் இடத்திற்கு பக்கத்தில் வாழ்கின்ற ஆதிதிராவிட மக்கள் கோட்டாறு-கருப்புக்கோட்டை சாலை அடைபடுவதினால் அவர் களுக்கு ஏற்படும் இன்னல்களைத் தெரிவித்து, அரசுக்கு முறையீடு செய்துள்ளனர் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, திருவனந்தபுரம்-திருநெல் வேலி-கன்னியாகுமரி ரயில்வே இணைப்புச் சாலையுடன் கோட்டாறு-கருப்புக் கோட்டை ரோடு கரியமாணிக்கபுரம் பஞ்சாயத்துக்கள் உட்பட்ட கிராமங் களில் நாகர்கோவிலிலிருந்து கருப்புக்கோட்டைக்குப் போகிற, ஆதி திராவிடர்கள் கிராமத்திற்குப் போகின்ற பாதை அடைக்கப்பட்டுவிட்டது. இதற்காக அப்பகுதி மக்களால் மனுக்கள் தயார் செய்யப்பட்டு அரசினிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும் எடுத்துச் சொல்லப்பட்டு, அதற்கு மாற்று ஏற்பாடு செய்து தருவதாகச் சொன்னார்கள். அதற்காக என்று அங்கேயுள்ள மக்களும் மனுக்களை அனுப்பி யிருக்கிறார்கள். இப்போது அமைச்சர் அவர்கள் தகவல் இல்லை என்று சொல்வதனால், தலைவர் அவர்களின் அனுமதியோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இந்த வேண்டுகோளைக் கொடுக்கிறேன். இனிமேலாவது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

@ 29—1—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்தி வைக்கப் பட்டது.